# இந்து சமயம் - சைவமும் வைணவமும்

GROUP-VIII வாராந்திரத் தேர்வு : 07 நாள்: 07.04.2017

1. இந்து தர்மத்தை பாமரர்கட்கு உரியதாக்கியவை?

(A) வேதங்கள் **(B) புராணங்கள்** (C) சம்ஹிதைகள் (D) உபநிடதங்கள்

2. இந்து மதம் என்பதற்கு?

(A) வேத மதம் (B) சித்தாந்த மதம் **(C) அன்பு மதம்** (D) மேலான மதம்

3. "அஹிம்ஸா பரமோதர்ம" எனப்படுவது?

(A) கீழான அறம் (B) மேலான அறம் (C) மேலான அரம் (D) கீழான அரம்

4. "அன்பே சிவமாவ தாரும அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" என கூறும் நூல்?

**(A) திருமந்திரம்** (B) திருக்குறள் (C) திருமூலர் (D) ஔவையார்

5. "சநாதனதர்மம்" என்பது?

(A) வேதாந்த மதம் (B) சுத்தாந்த மதம் (C) சைவ மதம் **(D) இந்து மதம்**

6. சமயம் என்பதன் பகுதி எது?

(A) சுவை **(B) சமை** (C) சமைய (D) சமைத்தல்

7. கீழ்கண்டவற்றில் இந்து மத நூல்களுக்கு பொருந்தாதவை எவை?

(A) புராணம் (B) சாத்திரம் **(C) வேதாந்தம்** (D) ஆகமம்

8. ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என வேதங்களை வகுத்தவர் யார்?

**(A) வேதவியாசர்** (B) திருமூலர் (C) வான்மீகி (D) கம்பர்

9. இருக் என்பதற்கு பொருள்?

(A) பாடுதல் **(B) வழிபடல்** (C) வேண்டல் (D) விதித்தல்

10. இருக் வேதம் எத்தனை மண்டலங்களை கொண்டது?

(A) 5 (B) 12 **(C) 10** (D) 15

11. யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளைச் செய்யவேண்டிய முறைகள் எதில கூறப்பட்டுள்ளது?

(A) இருக் (B) சாம (C) அதர்வணம் **(D) யஜுர்**

12. ருத்ரம் எதில் அமைந்துள்ளது?

**(A) யஜுர்** (B) ரிக் (C) சாம (D) அதர்வணம்

13. யாஜ் என்னும் பதத்துக்கு என்ன பொருள்?

(A) யோகம் **(B) யாகம்** (C) வேதம் (D) நாதம்

14. அமாவாசை, பௌர்ணமி காலங்களில் செய்ய வேண்டிய வேள்விகளை பற்றியும், பிதுர்கர்மம் முதலானவை பற்றியும் எதில் கூறப்பட்டுள்ளது?

(A) ரிக் (B) சாம (C) அதர்வண **(D) யஜுர்**

15. பாபத்தை நீக்கிப் பலனை கொடுக்கும் பாடல்கள் எதில் கூறப்பட்டுள்ளது?

(A) ரிக் (B) யஜுர் **(C) ஸாம** (D) அதர்வணம்

16. மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகளையும், விரோதிகளின் அழிவின் பொருட்டு செய்யும் கிரியா முறை பற்றி கூறுவது?

**(A) அதர்வணம்** (B) ரிக் (C) ஸாம (D) யஜுர்

17. உபநிஷத் எத்தனை?

(A) 107 **(B) 108** (C) 18 (D) 16

18. சங்கராச்சாரிய சுவாமிகள் பாஷ்யம் செய்துள்ள உபநிஷத்துகள் எத்தனை?

(A) 108 (B) 18 **(C) 10** (D) 17

19. கர்ஷணம் என்பது?

(A) **உழுதல்** (B) நடத்தல் (C) பேசுதல் (D) வழிபடுதல்

20. யோகபாதத்தில் கூறியவை?

(A) ஆன்மசுத்தி (B) அதர்வணம் (C) அந்தர்யாகம் **(D) a&c**

21. ஆகமங்கள் எத்தனை?

(A) 25 **(B) 28** (C) 38 (D) 18

22. ஆகமம் பிரி?

(A) ஆக+அமம் (B) ஆகம் +கமம் **(C) ஆ+கமம்** (D) ஆ+காமம்

23. வாமதேவ முகத்திலிருந்து தோன்றியவையில் பொருந்தாதது?

(A) அம்சுமான் (B) குஷ்மம் (C) சுப்ரபேதம் **(D) நிச்வாசம்**

24. ருத்ர பேதங்கள்?

**(A) 18** (B) 28 (C) 38 (D) 8

25. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. ஆகமம் | - 1. 108 | | (A) | 1 | 2 | 3 | 4 |
| b. முகம் | - 2. 28 | | (B) | 1 | 3 | 2 | 4 |
| c. ருத்ரபேதம் | - 3. 5 | | (C) | 2 | 3 | 1 | 4 |
| d. உபநிஷதம் | - 4. 18 | | **(D)** | **2** | **3** | **4** | **1** |

26. வைணவாகமங்கள் எத்தனை?

(A) 1 **(B) 2** (C) 3 (D) 4

27. வைகானஸாகம் யார் மூலம் உபதேசிக்கப்பட்டன?

(A) பலரிஷி (B) மகரிஷி **(C) விகனஸர்** (D) திருமூலர்

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

28. திருவாசகம் எத்தனையாவது திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது?

**(A) 8** (B) 12 (C) 10 (D) 6

29. திருமுறைகளில் உள்ள சில பாடல்களை மொழிபெயர்த்தவர்களில் பொருந்தாதவர்?

(A) பிலிப்ஸ் (B) பொன்னம்பலம் (C) ராமநாதன் **(D) பொன்னுசாமி**

30. முதலாழ்வார்கள் என்று அழைககப்படுபவர்கள்?

(A) பேயாழ்வார், பூதத்தாழ்வார், ஆண்டாள் (B) நம்மாழ்வார், பூதத்தாழ்வார், ஆண்டாள்

**(C) பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்** (D) பூதத்தாழ்வார், திருப்பாணாழ்வார், ஆண்டாள்

31. சரியான கூற்றை தேர்வு செய்க?

(A) மாணிக்கவாசகர் அருளிச் செய்தது திருவாசகம், திருக்கோவையார்

(B) திருமூலர் இயற்றியது திருமந்திரம்

(C) திருமாளிகைத்தேவர் முதலிய 9 பேர் இயற்றியது திருவிசைப்பா திருப்பல்லாண்டு

**(D) A,B,C மூன்றும்**

32. பதினோராந் திருமுறையை பாடியவர்கள் எத்தனை பேர்?

(A) 10 (B) 11 **(C) 12** (D) 13

33. திருவிசைப்பா, திருப்பல்லாண்டை பாடியவர்கள் எத்தனைபேர்?

(A) 10 (B) 7 (C) 3 **(D) 9**

34. ஒரு யாகத்தின் இடையில் ஐந்து இரவுகளில் பகவானால் உபதேசிக்கப்பட்டது?

**(A) பஞ்சராத்ரம்** (B) வைகானஸாகமம் (C) வெஸ்ணவாகமம் (D) ஞானபாதம்

35. பூஜைக்குரிய பொருள்களை சேகரித்தல் பற்றி எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) கிரியாபதம் **(B) சர்யா பதம்** (C) யோகபாதம் (D) தத்புருஷம்

36. போற்றி ப.ஃறொடை இயற்றியவர்?

(A) அருணந்தி சிவாசாரியார் **(B) உமாபதி சிவம்**

(C) மெய்கண்ட தேவநாயனார் (D) மணவாசங் கடந்தார்

37. ‘வேதம் ஸ்த்யம் வத’ என்பதன் பொருள்?

(A) தர்மத்தை செய் **(B) உண்மையை பேசு** (C) பழைய வரலாறுகள் (D) எதுவுமில்லை

38. ஏறாத தில்லை கொடியை ஏற்றியது?

(A) நெஞ்சுவிடு தூது (B) சிவஞானபோதம் **(C) கொடிக்கவி** (D) திருமந்திரம்

39. சமயக் கொள்கைகளை கூறி வேற்றுச் சமயக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளக்கும் நூல்?

(A) கொடிக்கவி (B) உண்மைநெறி விளக்கம்

(C) சங்கற்பநிராகரணம் **(D) நெஞ்சு விடு தூது**

40. தசசாரியங்களை விளக்குவது

(A) நெஞ்சுவிடுதூது **(B) உண்மை நெறி விளக்கம்**

(C) சங்கற்பநிராகரணம் (D) கொடிக்கவி

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

41. சிவஞானபோதத்திற்கு அடுத்தபடியாகத் திகழ்வதும் சிவஞான போதத்தை தழுவி எழுதப்பட்டதுமான பெருநூல்

(A) சிவப்பிரகாசம் (B) உண்மைநெறிவிளக்கம்

(C) திருவருட்பயன் **(D) சிவஞான சித்தியார்**

42. சமயங்களை எவ்வாறு பகுக்கலாம்?

(A) புற புறச் சமயம் (B) அகப்புறச் சமயம் (C) அகச்சமயம் **(D) நான்கும்**

43. ஒரு பொருள் உண்டென அறிவதற்கான அளவைகள்?

(A) காண்டல் (B) கருதல் (C) நூலளவை **(D) A, B, C**

44. புத்தர் என்ற சொல்லிற்கு ------ எனப்பெயர்?

**(A) அறிஞர்** (B) மதம் (C) மாணவன் (D) கற்றல்

45. சரியான கூற்றை தேர்வு செய்?

(A) சிவன் அநாதி சித்தன், முத்தன், பெத்தன் என 3 வகைபடுவன்

(B) அநாதி சித்தனே அருகக் கடவுள்

(C) முத்தன் ஆசாபாசம் நீங்கிக் கட்டறுத்தவன்

**(D) A, B, C சரியானவை**

46. இருபத்தைந்தாவது தத்துவம் புருடன் என்று கூறுவது?

**(A) சாங்கியம்** (B) பீமாம்ஸம் (C) பௌத்தம் (D) சமணம்

47. அத்வைதத்தை பரப்பியவர்?

**(A) சங்கரர்** (B) மத்துவர் (C) வேதவியாசர் (D) இராமானுஜர்

48. வைசேஷிகம் என்னும் தர்சனத்தை இயற்றியவர்?

**(A) சுணாதர்** (B) அக்க பாதராவர் (C) பதஞ்சலிமுனிவர் (D) வைசாகர்

49. வைசேஷகப் பொருள்கள் எத்தனை?

(A) 12 **(B) 16** (C) 18 (D) 28

50. ஆன்ம சுத்தியை பற்றி கூறுவது?

(A) ஞானபாதம் **(B) யோக பாதம்** (C) கிரியாபாதம் (D) சர்யா பாதம்

51. சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்க பொருள்களையும் நீரில் கலந்து இடவேண்டும் இதற்கு பெயர்

(A) அபிடேகம் **(B) பாத்யம்** (C) ஆராதனை (D) அர்ச்சனை

52. நீரில் ஏக்காய், கிராம்பு, பச்சைகற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ முதலியவற்றை ஈட்டு சம்கிதா மந்திரம் கூறி பாதத்தில் இட வேண்டும் இதன் பெயர்

(A) பாத்யம் (B) வைநேத்யம் (C) தீர்த்த அர்ச்சனை **(D) ஆசம நியம்**

53. தூபம் எனப்படுவது

(A) கற்பூரம் வைத்தல் (B) விளக்கு ஏற்றல்

(C) ஊதுபத்தி வைத்தல் **(D) சாம்பிராணி புகைத்தல்**

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

54. அர்க்கிய முறைபடி மூலமந்திரம் கூறும்பொழுது எந்த நீரால் அர்க்கியம் (அர்ச்சனை) இட வேண்டும்

(A) ஏலக்காய், கிராம்பு, பச்சை கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய் கலந்த நீர்

(B) சந்தனம், அறுகு, விலாமிச்சை, வெண்கடுகு, சாம்பிராணி கலந்த நீர்

(C) சந்தனம், இளநீர், பால், பன்னீர், மஞ்சள், வேர் கலந்த நீர்

**(D) எள், யவநெல், தர்ப்பை நுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு கலந்த நீர்**

55. இறைவனை வரவழைத்து நேர்முகபடுத்தி விக்கிரத்தில் சேர்ப்பதற்கு ------------ என்று பெயர்

(A) கும்பாபிஷேகம் (B) நீராட்டுதல் (C) குடமுழுக்கு **(D) ஆவாகனம்**

56. ஸ்தாபனம் என்பது

**(A) பீடத்தில் அருள்வேண்டி இறைவனை அமர்த்துதல்**

(B) விக்கிரகங்களை ஸ்தலங்களுக்கு கொண்டு சேர்த்தல்

(C) மந்திரங்களை ஜெபித்து ஆராதனை செய்வது

(D) பீடத்தில் உள்ள விக்கிரகங்களை மாற்றுதல்

57. பூஜிக்கப்படும் கடவுள் நமக்கு அனுகிரகம் செய்யும் முறையும் பூஜகன் அருள் பெறும் முறையின் பெயர்

(A) ஸ்தாபனம் (B) ஆசி பெற்றல் (C) சந்திரோதனம் **(D) சந்நிதானம்**

58. பூஜை முடியும் வரை அடியேனிடம் (சாந்தம்) சாந்நித்யம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதல்

(A) சாந்தியானம் (B) சந்நிதானம் **(C) சந்நிரோகனம்** (D) சந்திரதானம்

59. அபிடேகத்தில் வரிசையாக அர்ச்சனை செய்த பின் தேனுமுத்திரை காட்ட வேண்டும். அத்தேனுமுத்திரை என்பது

(A) நல்லெண்ணெய் தீபாரதனை **(B) பசுவின் அகடு**

(C) வெண்ணெய் (D) கற்பூரம் ஆராதனை

60. சரியானவற்றைத் தேர்ந்தெடு

(a) ஞானம் - பதிஞானம், பசுஞானம், பாசஞானம் மூவகை

(b) பதிஞானம் - தற்பிரகாசம், பரப்பிரகாசம் என இருவகை

(c) தற்பிரகாசம் - ஒளி ஞானம்

(d) பரப்பிரகாசம் - ஆன்மாவைக் காட்டுதல்

**(A) அனைத்தும் சரி** (B) அனைத்தும் தவறு

(C) a&b சரி c,d தவறு (D) a&b தவறு c,d சரி

61. பொருந்தாதை தேர்ந்தெடு

(A) இமயம் - தன்னை அடக்குதல்

(B) நியமம் - தன்னை நிச்சயித்துக்கொள்ளுதல்

(C) தியானம் - மனதை இறைவனிடத்தில் கவனமின்றி நிலைநிறுத்தி வழிபடல்

**(D) சமாதி - மனம் சுயபோதத்தை இழக்காமல் இறையருளிந் தோயந்துநிற்கும் நிலை**

62. தனது வழிபடு கடவுளை அகத்தும், புறத்தும் பூசித்து வழிபடும் செயல்

(A) சரியை **(B) கிரியை** (C) சற்புத்திரமார்க்கம் (D) B & C

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

63. சரியை மார்க்கத்திற்கான திருத்தொண்டுகளை விளக்கியவர், விளக்கும் நூல்

(A) மாணிக்கவாசகர், திருவாசகம்
(B) திருமூலர்,திருமந்திரம்
**(C) அப்பர், ஆரூர்த்தாண்கம்**
(D) நம்பிஆரூரார், திருத்தொண்டத்தொகை

64. நால்வகை மார்க்கங்களில் ஒழுங்கான வழியில நடத்தல் என்பதைக் குறிப்பது

**(A) சரியை** (B) தாஸமார்க்கம் (C) கிரியை (D) a&b

65. கு+ ர் + உ = குரு இதில் உள்ள 'உ' கரம் எவரைக்குறிக்கும்?

(A) பிரம்மா (B) விஷ்ணு **(C) சிவன்** (D) முருகன்

66. "குருட்டினை நீக்குங் குருவினை கொள்ளார்

குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்" என்ற பாடலடி இடம் பெற்ற நூலின் ஆசிரியர்

(A) அருணந்தி சிவாசாரியார்
**(B) திருமூலர்**
(C) திருவிளையாடற்புராணம்
(D) கந்தபுராணம்

67. a) குரு தன் சீடனுக்குச் செய்யும் உபகாரத்தை தீக்கை என்பர்

b) ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தை நீக்குவது இதன் பொருள்

(A) A – சரி B தவறு
(B) A – தவறு, B சரி
**(C) A&B இரண்டும் சரி**
(D) A &B இரண்டும் தவறு

68. தீக்கையின் வகைகள் எத்தனை?

(A) 2 **(B) 3** (C) 4 (D) 7

69. தீக்கை செய்யும் முறைகள்

(A) 3 (B) 5 **(C) 7** (D) 9

70. தீக்கை செய்யும் முறைகளுள் பொருந்தாது

(A) நயனம் (B) மானதம் **(C) நியமம்** (D) மந்த்ரம்

71. குரு தனது கரங்களால் சீடனைத் தொடுவது

**(A) ஸ்பர்ச தீக்கை** (B) ஔத்திரி தீக்கை (C) யோக தீக்கை (D) நயன தீக்கை

72. மந்த்ர தீக்கையை யாருடைய வாக்கினால் அறியலாம்?

(A) திருமூலர்
**(B) ஆளுடைப்பிள்ளை**
(C) ஆளுடை அரசு
(D) அழுது அடியடைந்த அன்பர்

73. இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைக்குரிய பொருள்களைத் தீயில் இட்டு எரிக்கும்போது இறைவனுக்கு அது என்னவாக சேர்கிறது?

**(A) ஹவிஸ்** (B) அந்தரிதம் (C) நைமித்திகம் (D) பிம்பசுத்தி

74. A: மகாபிடேகம் (அ) மகாபிஷேகம் (பிரதிட்டைக்குரிய கிரியைகள்)

B: கும்பாபிஷேகம் கழிந்த பிறகு இறைவன் எழுந்தருளியிருக்கும் விக்கிரகத்திற்கு முறைப்படி அபிடேக, அலங்கார, நிவேதனம் செய்தலாகும்.

**(A) A & B இரண்டும் சரி**
(B) A & B இரண்டும் தவறு
(C) A சரி B தவறு
(D) A தவறு B சரி

75. பிரதிட்டைக்குரிய கிரியைகளாக ஆகமங்கள் கூறுவது

(A) 74 **(B) 64** (C) 63 (D) 73

76. கும்பத்தாபணம் பற்றிய கருத்துகளில் சரியானதைத் தேர்க.

a). தோல் - ஆடை அணிவது
b). இரத்தம் - மண்பூசுவது
c). நரம்பு - நூல்களைச் சுற்றுவது
d). தாது - இரத்தினமிடுவது
e). ஜீவன் - மந்திரம் கூறுவது

(A) a, b, c சரி d, e தவறு (B) c, d, e சரி a, b தவறு

(C) அனைத்தும் தவறு **(D) அனைத்தும் சரி**

77. மூலஸ்தான மூர்த்திக்குச் செய்யப்படும் முக்கிய கிரியை எது?

(A) ஸ்பர்சாகுதி **(B) அட்டபந்தனம்** (C) பிம்பசுத்தி (D) கும்பத்தானம்

78. யாகசாலைக் குடத்திற்கும் மூலவிக்கிரகத்திற்கும் இணைப்பை ஏற்படுத்தும் கிரியை

(A) காப்பு கட்டு (B) கலாகர்ஷணம் **(C) ஸ்பர்சாகுதி** (D) பிம்பசுத்தி

79. விபூதியின் வேறுபெயர்களுள் பொருந்தாதது?

(A) குட்சாரம் **(B) சாமரம்** (C) பஸ்மம் (D) பசிதம்

80. ‘‘மந்திர மாவது நீறு வாணவர் மேலதுநீறு’’ என்ற பாடலடி யார் யாருக்கு பாடியது?

(A) அப்பர், மூத்த திருநாவுக்கரசு **(B) ஞானசம்பந்தர், பாண்டியன்**

(C) தாயுமானவர், திருமூலர் (D) இராமனுஜர், இராமானந்தர்

81. ‘‘சந்தனத்திலகம் இடுவது’’

(a) உடலின் வெப்பத்த நீக்க

(b) உற்சாகத்தை உண்டுபண்ண

(c) பல நரம்புகள் புருவ மத்தியில் ஒன்று கூடுவதால் ஏற்படும் வெப்பத்தை தணிக்க

(d) பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்ட

(A) a, c, d சரி b தவறு (B) a, d, சரி b, c தவறு

**(C) அனைத்தும் சரி** (D) A மட்டும் சரி

82. ‘‘மாலின் மொழியாள் ஓர்பாகங்கண்டேன்

நெற்றிநுதுல் கண்டேன் பெற்றங் கண்டேன்’’ இவ்வடிகளின் ஆசிரியர்

**(A) அப்பர்** (B) தோடுடைய செவியன் (C) திருவாதவூரர் (D) சுந்தரர்

83. தேவாரப்பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் எவ்வாறு அழைக்கப்படும்

**(A) தலங்கள்** (B) தேவ தர்ஸணம் (C) திவ்விய தேசம் (D) சுதர்ஸனம்

84. ஆழ்வார்கள் பாடல்களை எவ்வாறு சிறப்பித்துக் கூறுவர்

(A) மகாசாசனம் **(B) மங்களா சாசனம்** (C) திவ்வியாசனம் (D) அஷ்டதம்

85. சித்தர் பாடல்கள் ------------------- என்றும் போற்றப்படுகின்றன

(A) நாட்டுபுற பாடல்கள் (B) யோகிகளின் இலக்கியம்

**(C) மக்கள் இலக்கியம்** (D) சங்கப்பாடல்கள்

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

86. மானிடர் வயது நூறு என்றும், ஒரு நாளைக்கு சுவாசம் 21600 என்றும் கணக்கிட்டு கூறிய சித்தர்

(A) கருவூரார் (B) இராமலிங்க அடிகள் (C) அகத்தியர் **(D) உரோமரிஷ்**

87. கடவுளை காண முயல்பவர்கள் பக்தர்கள் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் எனக் கூறுவது

(A) சிவபுராணம் (B) திருவாசகம் **(C) தேவாரம்** (D) 'பள்ளு' இலக்கியம்

88. சித்தர்களில் பஞ்மர் என்று குறிப்பிடப்படுபவர்கள்

**(A) திருமூலர், சிவவாக்கியார், பட்டினத்தார், திருமாளிகைதேவர் – கருவூரார்**

(B) திருமூலர், பட்டினத்தார், பத்திரிகிரியார், மதுரைவாலசாமி, கருவூரார்

(C) அகத்தியர், திருமூலர், சிவாக்கியார், பட்டினத்தார், பத்திரிகிரியார்

(D) அகத்தியர், பட்டினத்தார், கருவூரார், சிவாக்கியார், அழுகுணி சித்தர்

89. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. அணியா | - 1. கூடுவிட்டு கூடு பாயுதல் | | (A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| b. இலகுமா | - 2. பொன் போல் பளுவாதல் | | (B) | 5 | 4 | 2 | 3 | 1 |
| c. கரிமா | - 3. எல்லாவற்றையும் ஆளுதல் | | **(C)** | **5** | **4** | **2** | **1** | **3** |
| d. பிராகாமியம் | - 4. காற்றைப்போல லேசாகுதல் | | (D) | 4 | 5 | 2 | 1 | 3 |
| e. பிராப்தி | - 5. அணுவைப்போல் சிறியதாதல் | | | | | | | |

90. இஸ்லாம் சமய சித்தர் யார்?

(A) குணங்குடி மஸ்தான் சாகிபு **(B) பீர் முகமது** (C) உமறுபுலவர் (D) பனு அகமது

91. தூதுவலையை ஞான பச்சிலை என்று கூறியவர்

(A) ராமலிங்கனார் **(B) இராமலிங்க அடிகளார்** (C) அகத்தியர் (D) திருமூலர்

92. "உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார் ஸ
உறவு கலவாமை வேண்டும்" பாடியவர்

(A) திருமூலர் **(B) ராமலிங்க அடிகளார்** (C) தொல்காப்பியர் (D) பட்டினத்தார்

93. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. 9-ம் திருமுறை | - 1. திருமாளிகைதேவர் உள்ளிட்ட 9 பேர் | (A) | 4 | 3 | 2 | 1 |
| b. 10-ம் திருமுறை | - 2. திருமூலரின் திருமந்திரம் | (B) | 1 | 2 | 4 | 3 |
| c. 11-ம் திருமுறை | - 3. காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட 12 பேர் | **(C)** | **1** | **2** | **3** | **4** |
| d. 12-ம் திருமுறை | - 4. சேக்கிழாரின் பெரியபுராணம் | (D) | 1 | 3 | 2 | 4 |

94. கீழ்கண்டவற்றுள் சரியானது எது?

i. 'தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' – நாவுக்கரசர்

ii. 'பித்தா பிறை சூடி' – சுந்தரர்

iii. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாரோ' – நாவுக்கரர்

iv. இன்பமே எந்நாளும் துன்பமில்லை' – ஞானசம்பந்தர்

**(A) i, ii, iii** (B) I மட்டும் (C) ii மட்டும் (D) அனைத்தும்

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

95. பன்னிரு திருமுறைகளில் இடம் பெற்ற காப்பியம்?

(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை (C) A& B **(D) பெரியபுராணம்**

96. சேரமான் பெருமாள் நாயனாரோடு கயிலை சென்றவர்?

**(A) சுந்தரர்** (B) ஞானசம்பந்தர் (C) நாவுக்கரசர் (D) திருமூலர்

97. தாண்டகம் முதன் முதலில் பாடியவர்?

(A) திருஞானசம்பந்தர் **(B) திருநாவுக்கரசர்** (C) சுந்தரர் (D) மாணிக்கவாசகர்

98. கீழ்கண்டவற்றுள் தவறான கூற்றை தேர்வு செய்க

i. மூவர் தமிழ் - தேவாரம்

ii. மூவர் முதலிகள் - முதல் மூன்று நாயன்மார்கள்

iii. சமய குரவர்கள் - முதல் நான்கு நாயன்மார்கள்

iv. 63 நாயன்மார்களில் 3 பேர் பெண்கள்

(A) i, ii (B) iv மட்டும் (C) iii, iv **(D) எதுவுமில்லை**

99. தலையால் நடந்து சிவனை வழிபட்டவர்?

(A) புனிதவதி அம்மையார் (B) பேயார் (C) அம்மை **(D) A,B மற்றும் C**

100. திருஞான சம்பந்தரை 'திராவிட சிசு' என்று கூறியவர்?

(A) சுந்தரர் (B) நாவுக்கரசர் **(C) ஆதிசங்கரர்** (D) காரைக்கால் அம்மையார்

101. 'திருமுறை கண்ட சோழன்' என்று அழைக்கப்படுபவர்?

(A) முதலாம் இராஜேந்திர சோழன் **(B) முதலாம் இராஜராஜ சோழன்**

(C) இரண்டாம் இராஜேந்திர சோழன் (D) இரண்டாம் இராஜராஜ சோழன்

102. முருகனின் அவதாரமாக போற்றப்படுபவர்?

**(A) திருஞான சம்பந்தர்** (B) திருநாவுக்கரசர் (C) சுந்தரர் (D) மாணிக்க வாசகர்

103. பொருத்துக

| | | | | a | b | c |
|---|---|---|---|---|---|---|
| a. கொஞ்சு தமிழ் | - 1. சுந்தரர் | | (A) | 1 | 2 | 3 |
| b. கெஞ்சு தமிழ் | - 2. திருநாவுக்கரசர் | | **(B)** | **3** | **2** | **1** |
| c. மிஞ்சு தமிழ் | - 3. திருஞானசம்பந்தர் | | (C) | 1 | 3 | 2 |
| | | | (D) | 2 | 1 | 3 |

104. பொருத்துக

| மார்க்கம் (அ) நெறி | சமயக்குரவர்கள் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சர்புத்திர மார்க்கம் | - 1. திருஞான சம்மந்தர் | (A) | 4 | 3 | 2 | 1 |
| b. தச மார்க்கம் | - 2. திருநாவுக்கரசர் | **(B)** | **1** | **2** | **3** | **4** |
| c. சக மார்க்கம் | - 3. சுந்தரர் | (C) | 1 | 2 | 4 | 3 |
| d. சர்க்குரு மார்க்கம் | - 4. மாணிக்கவாசகர் | (D) | 4 | 3 | 1 | 2 |

105. 'திருவேலங்காட்டு திருப்பதிகம்' என்று நூலை எழுதியவர்?

**(A) காரைக்கால் அம்மையார்** (B) சுந்தரர் (C) திருமூலர் (D) மங்கையர்க்கரசியார்

106. தோத்திரங்களின் எண்ணிக்கை?

(A) 14 (B) 10 (C) 7 **(D) 12**

107. முழுமுதற் கடவுள்

(A) முருகன் (B) விஷ்ணு (C) பிரமன் **(D) சிவன்**

108. எந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் பாடப்பட்டது?

(A) 9-ம் நூற்றாண்டு (B) 10 –ம் நூற்றாண்டு (C) 11-ம் நூற்றாண்டு **(D) 12-ம் நூற்றாண்டு**

109. அகவிருளை நீக்கி மெய்பொருளை தெளிவாக்கும் திருமுறைகளின் எண்ணிக்கை?

**(A) 12** (B) 14 (C) 10 (D) 7

110. தில்லை நடராஜ பெருமானால் ‘உலகெலாம்’ என அடியெடுத்து கொடுக்க பாடப்பட்ட நூல்?

(A) பெரியபுராணம் (B) திருவிளையாடற்புராணம்

(C) திருத்தொண்டர் புராணம் **(D) A&C**

111. பெரியபுராணத்தில் யாருஜடய பாடல்கள் அதிகம் இடம் பெற்றுள்ளது?

**(A) ஆளுடையப்பிள்ளை** (B) மருள் நீக்கியார்

(C) ஆரூரார் (D) அழுகு அடியடைந்த அன்பர்

112. உலகம், உயிர், கடவுள் ஆகிய 3ம் ஒருங்கே காட்டும் காவியம் தான் பெரிய புராணம் எனக் கூறியவர்?

**(A) திரு.வி.க** (B) சேக்கிழார் (C) அருண்மொழித் தேவர் (D) B & C

113. பெரிய புராணம் எந்த சமயத்தை சேர்ந்த நூல்?

(A) வைணவம் **(B) சைவம்** (C) பௌத்தம் (D) சமணம்

114. பெரிய புராணத்தின் பெரும்பிரிவு மற்றும் உட்பிரிவு முறையே

**(A) காண்டம், சுருக்கம்** (B) காண்டம், காதை (C) காண்டம், படலம் (D) காதை, படலம்

115. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. திருத்தொண்டர் தொகை | - 1. நம்பியாண்டார் நம்பி | **(A)** | **3** | **1** | **2** | **4** |
| b. திருத்தொண்டர் திருவந்தாதி | - 2. சேக்கிழார் | (B) | 1 | 2 | 3 | 4 |
| c. திருத்தொண்டர் புராணம் | - 3. சுந்தரர் | (C) | 2 | 3 | 1 | 4 |
| d. திருக்கோவை(அ) இராசகோவை | - 4. மாணிக்கவாசகர் | (D) | 2 | 1 | 3 | 4 |

116. ‘இன்தமிழ் இயேசுநாதன்’ என்று அழைக்கப்படுபவர்

(A) நாவுக்கரசர் **(B) சம்பந்தர்** (C) மாணிக்கவாசகர் (D) கிருட்டிணப்பிள்ளை

117. பெரியபுராணத்தில் உள்ள சுருங்கங்களின் எ ண்ணிக்கை

(A) 9 (B) 12 (C) 14 **(D) 13**

118. திருத்தொண்டர் புராணத்தின் காப்பியத்தலைவன்

(A) சேக்கிழார் (B) அனாபாய சோழன் **(C) சுந்தரர்** (D) ஞானசம்பந்தர்

119. பெரியபுராணத்திற்கு பேருரை வழங்கியவர்

(A) பெரியவச்சான் பிள்ளை (B) நச்சினார்கினியர்

(C) அனாபாய சோழன் **(D) சி.கே.சுப்பிரமணிய முதலியார்**

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

120. சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தை அரங்கேற்றிய இடம்

**(A) தில்லை (சிதம்பரம்)** (B) திருக்கோவிலூர் (C) குன்றத்தூர் (D) நாட்டரசன் கோட்டை

121. அமைச்சராய் இருந்து தமிழை வளர்த்தவர்

(A) அருண்மொழித்தேவர் (B) சேக்கிழார் (C) திருமூலர் **(D) A & B**

122. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி.

I. கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் என்பர். இதனை “பிரமரந்திர மத்ய கபாலத்வாரம்” என யோகிகள் கூறுவர்.

II. அண்டபிண்டங்கள் அனைத்தையும் அடக்கிக்கொண்டு இருக்கும் இறைவனது விராட்ஸ்வரூபம் கோபுரமாகும்.

(A) I மட்டும் சரி (B) II சரி **(C) I & II சரி** (D) இரண்டும் தவறு

123. விசார சருமர் என்பவர் யார்?

(A) நாராயணன் **(B) சண்டேசுவரர்** (C) மகேசுவரன் (D) இவர்களுள் யாருமிலர்

124. பொருத்துக.

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. விமானத்தின் மேல்புறம் | - | 1. முருகன் | | (A) | 1 | 3 | 2 | 4 |
| b. விமானத்தின் கீழ்புறம் | - | 2. விஷ்ணு | | **(B)** | **2** | **1** | **4** | **3** |
| c. விமானத்தின் தென்புறம் | - | 3. பிரமன் | | (C) | 1 | 2 | 4 | 3 |
| d. விமானத்தின் வடபுறம் | - | 4. தட்சிணாமூர்த்தி | | (D) | 2 | 4 | 1 | 3 |

125. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி.

I. கொடிமரம் சூட்சமலிங்கம் ஆகும்.

II. கொடிமரம் மும்மூர்த்திகளையும், முத்தொழில்களையும் உணர்த்தும்

(A) I சரி (B) II சரி **(C) I & II சரி** (D) I & II தவறு

126. கொடி மரங்கள் எத்தனை கணுக்கள் பெற்றிருப்பது சிறப்பு?

(A) 30 **(B) 33** (C) 43 (D) 40

127. கொடி மரத்தின் தத்துவத்தை எந்த நிலையோடு ஒப்பிடலாம்?

**(A) யோகநிலை** (B) கர்மநிலை (C) மாயை (D) எதுவுமில்லை

128. கீழ்க்கண்ட கூற்றைக் கவனி.

I. ஆலயங்களில் கர்ப்பகிரகம் (or) மூலஸ்தானம் முக்கியமான இடம்.

II. இது எல்லா உலகங்களையும் படைக்க காரணமான மூலப்பிரகிருதியின் இடமாகும்.

(A) I சரி (B) II சரி **(C) I & II சரி** (D) I & II தவறு

129. எந்த சொல்லுக்கு ‘எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பவர்’ என்று பொருள்

(A) குரு (B) சிவம் **(C) நந்தி** (D) லிங்கம்

130. “திருவோணம்”

(A) சிவனுக்கு உகந்த நாள் **(B) விஷ்ணுவிற்கு உகந்த நாள்**

(C) விநாயகருக்கு உகந்த நாள் (D) முருகனுக்கு உகந்த நாள்

Kalai IAS Academy
சாதனையாளர்களின் சரித்திர கூடம்

131. தும்புரு, நாரதர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்தியவர் யார்?

(A) திருநந்திதேவர் (B) சிவன் **(C) தட்சிணாமூர்த்தி** (D) சரஸ்வதி

132. “சைத்ரோத்ஸவம்” என்பது

(A) பங்குனி உத்திரம் **(B) சித்ரா பௌர்ணமி** (C) வைகாசி விசாகம் (D) ஆனி உத்திரம்

133. “கர்ணபூஷனம்” என்பது

**(A) காது குத்தல்** (B) மொட்டை அடித்தல் (C) உபவாசகம் இருத்தல் (D) வேள்வி செய்தல்

134. பிக்ஷாடனக் கோலம்

(A) கணபதி கோலம் (B) தேவி கோலம் **(C) விஷ்ணு கோலம்** (D) சிவ கோலம்

135. இறைவன் எடுக்கும் திருமேனி வகைகள்

(A) 2 **(B) 3** (C) 4 (D) 5

136. “சரவணம்” என்பது

(A) கரும்புக் காடு **(B) நாணற் காடு** (C) ஊசியிலைக் காடு (D) சதுப்பு நிலக் காடு

137. “உடுக்கள்” என்பது

(A) ஆறுகள் (B) மேகங்கள் **(C) நட்சத்திரங்கள்** (D) மலைகள்

138. “அங்குரார்ப்பணம்” என்பது

(A) வேல் எறிதல் (B) காப்பு கட்டுதல் **(C) முளையிடுதல்** (D) அர்ப்பணித்தல்

139. “அபரக்கிரியை” என்பது

(A) ஏழைக்கு உதவுவது (B) பிறந்த குழந்தைக்கு செய்வது

**(C) தந்தை இறந்தவுடன் மகன் செய்வது** (D) இறைவனுக்கு செய்வது

140. “அத்தி சஞ்சயனம்” என்பது

(A) மாலையில் உறங்குதல் (B) விறகு சேகரித்தல்

**(C) எலும்பைச் சேகரித்தல்** (D) சாம்பல் சேகரித்தல்

141. தில்லை வாழ் அந்தணர்கள்

(A) 1000 பேர் (B) 2000 பேர் **(C) 3000 பேர்** (D) 4000 பேர்

142. “சஷ்டி அப்த பூர்த்தி” என்பது

(A) ஐம்பது வயது நிறைவு விழா **(B) அறுபது வயது நிறைவு விழா**

(C) எழுபது வயது நிறைவு விழா (D) எண்பது வயது நிறைவு விழா

143. “துவஜாரோகணம்”

(A) காப்பு கட்டுதல் (B) தீபம் காட்டுதல் **(C) கொடியேற்றல்** (D) தீ மிதித்தல்

144. நந்தி விலகிய இடம்

(A) திருவாரூர் (B) திருபுன்கூர் **(C) திருநள்ளாறு** (D) திருபூந்துருத்தி

145. “கண்டிகை” என்பது

(A) திருநீறு (B) காவி உடை

**(C) உத்திராக்க மணி** (D) கெண்டி போன்ற பாத்திரம்

146. ‘‘பீலிகை’’ என்பது

(A) துடைப்பான் **(B) சாமரம்** (C) புழு (D) எறும்பு

147. ஆன்ம தத்துவங்களின் எண்ணிக்கை

(A) 14 **(B) 24** (C) 34 (D) 44

148. சன்மார்க்கத்தின் பதவி

(A) சாலோகம் (B) சாரூபம் (C) சாமிபம் **(D) சாயுஜ்ஜியம்**

149. சோட சோபசாரங்கள்

**(A) 16** (B) 32 (C) 64 (D) 128

150. கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது எது?

(A) மச்சாவதாரம் - ஹிரண்யகசிபு

(B) வராகவதாரம் - ஹயக்கிரிவன்

(C) நரசிம்மஅவதாரம் - ஹிரண்யாகரன்

**(D) வாமனாவதாரம் - மகாபலி**

151. கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது எது?

**(A) அண்டஜம் - முட்டையில் தோன்றுவன**

(B) சுவேதஜம் - கருப்பையில் தோன்றுவன

(C) உதபிஜ்ஜம் - வேர்வையில் தோன்றுவன

(D) சராபுஜம் - கொடி, கிழங்கு இவற்றில் தோன்றுவன

152. கீழ்க்கண்ட உரைகளைக் கருதுக.

I. உலகாயத மதத்தினர் அழகிய பெண்களை மணந்து இன்புறுதலே முத்தி என்று கூறுகின்றனர்.

II. ஜைனர்கள் எண்குணமடைதலே முத்தி என்று கூறுகின்றனர்.

III. வைசேடிகர் கல் போல் கிடத்தலே முத்தி என்று கூறுகின்றனர்.

IV. சாங்கியர் தத்துவங்களைப் பகுத்துணரும் விவேக ஞானமே முத்தி என்று கூறுகின்றனர்.

மேற்கண்ட உரையில்:

(A) I மட்டும் சரியானது

(B) I மற்றும் II சரியானவை

(C) I, II மற்றும் III சரியானவை

**(D) அனைத்தும் சரியானவை**

153. கீழ்க்கண்ட உரைகளைக் கருதுக.

I. குரு தனது கரங்களால் சீடனைத் தொடுவது ஸ்பர்ச தீக்கை

II. குரு தனது அருட்பார்வையால் மாணவனை நோக்குதல் நயன தீக்கை

III. குரு தன் மனத்தால் மாணாக்கனது மனத்தை தன்வயப்படுத்துதல் மானத தீக்கை

IV. குரு மாணவனை இறைவனோடு ஒன்ற வைப்பது யோக தீக்கை

மேற்கண்ட உரையில்:

(A) I மட்டும் சரியானது

(B) I மற்றும் II சரியானவை

(C) I, II மற்றும் III சரியானவை

**(D) அனைத்தும் சரியானவை**

154. ‘‘சின்னமுத்திரை’’ உணர்த்துவது

**(A) ஞானத்தை** (B) அஞ்ஞானத்தை (C) நடத்தையை (D) நன்மையை

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

155. உயிர்களின் அவத்தைகள்

**(A) 5** (B) 7 (C) 9 (D) 11

156. கன்மங்களின் வகைகள்

(A) 5 (B) 4 **(C) 3** (D) 2

157. மாயையின் வகைகள்

(A) 8 (B) 6 (C) 4 **(D) 2**

158. "அர்த்தநாரீசுவர்" என்பதற்குப் பொருள்

**(A) பாதி மாதுடைய பரமன்** (B) கால்பாகம் மாதுடைய பரமன்

(C) சிவபெருமான் (D) பார்வதி பரமசிவன்

159. "லிங்கம்" என்பது

**(A) குறி** (B) கடவுள் (C) உயிர் (D) சக்தி

160. அத்வைதம் என்பது

(A) ஒன்றாக உள்ளது (B) ஒன்றற்றது (C) இரண்டற்றது **(D) இரண்டற்ற ஒன்று**

161. வைணவாகமம் இருவகைப்படும் அவைகள்

(A) காரணாகமம், காரியாகமம் **(B) பாஞ்சராத்ராகமம், வைகானஸாகமம்**

(C) காரியாகமம், யோகஜாகமம் (D) இவற்றுள் எதுவுமில்லை

162. எல்லாம் ஒடுங்கி மீண்டும் வெளிப்படும் என்று எதனை குறிப்பிடலாம்?

(A) கோபுரம் (B) கொடி மரம் (C) விமானம் **(D) லிங்கம்**

163. அக தத்துவ கருவிகள் எத்தனை?

(A) பதினாறு (B) இருபத்தியாறு **(C) முப்பத்தாறு** (D) நாற்பத்தாறு

164. பொருத்துக.

a. பிருத்திவியின் கூறுபயம், மைதுனம், சோம்பல்- 1. ஆகாயம், நித்திரை, ஐந்து

b. அப்புவின் கூறு ஐந்து - 2. குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்

c. தேயுவின் கூறு ஐந்து - 3. மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை

d. வாயுவின் கூறு ஐந்து - 4. நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மஜ்ஜை

e. ஆகாயத்தின் கூறு ஐந்து - 5. ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 5 | 1 | 3 |
| (B) | 3 | 5 | 1 | 2 | 4 |
| **(C)** | **3** | **4** | **1** | **5** | **2** |
| (D) | 4 | 3 | 1 | 5 | 2 |

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

165. “திருநெறிய தமிழ்” என குறிக்கப்பெறுவது

**(A) ஞானசம்பந்தர் பாடல்கள்** (B) சுந்தரர் பாடல்கள்

(C) பாரதியார் பாடல்கள் (D) குமரகுருபரர் பாடல்கள்

166. சுத்த மாயையும் அவர்களின் அதிபர்களையும் பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. நாதம் | - 1. மகேஸ்வரன் | | (A) | 2 | 4 | 1 | 3 |
| b. விந்து | - 2. சதாசிவம் | | **(B)** | **4** | **3** | **2** | **1** |
| c. சாதாசிவம் | - 3. சக்தி | | (C) | 3 | 1 | 4 | 2 |
| d. சுத்த வித்தை | - 4. சிவம் | | (D) | 3 | 4 | 2 | 1 |

167. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. சாருவாக்கம் | - 1. பதஞ்சலி | | (A) | 2 | 4 | 1 | 3 |
| b. வைஷேஷிகம் | - 2. பிரகஸ்பதி | | **(B)** | **2** | **3** | **4** | **1** |
| c. நியாயம் | - 3. கணாதர் | | (C) | 3 | 1 | 4 | 2 |
| d. யோகம் | - 4. அக்கபாதராவர் | | (D) | 1 | 3 | 2 | 4 |

168. மங்களம், கொடை, சாத்வீகம், போர் என்ற தன்மைகள் முருகனின் எந்த பெயருக்குப் பொருந்தும்?

**(A) சரவணபவன்** (B) காங்கேயன் (C) சுப்பிரமணியன் (D) சண்முகம்

169. ஆன்மா பந்தமுற்று இன்பதுன்பங்களை அனுபவிக்கும், எலும்பு மாலை அணிந்து சரியை தொண்டு செய்தால் முக்தி பெறலாம் என்ற கொள்கையைக் கொண்ட சைவ சமய கிளை எது?

(A) பாசுபதம் (B) காபாலம் **(C) மாவிரதம்** (D) வயிரவம்

170. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. கௌமாரம் | - 1. முருகனே கடவுள் | | **(A)** | **1** | **4** | **2** | **3** |
| b. ஸௌரம் | - 2. சக்தியே கடவுள் | | (B) | 4 | 2 | 1 | 3 |
| c. சாக்தேயம் | - 3. கணபதியே கடவுள் | | (C) | 2 | 3 | 1 | 4 |
| d. காணாபத்தியம் | - 4. சூரியனே கடவுள் | | (D) | 3 | 4 | 1 | 2 |

171. “உயிதர் அறிவிக்க வேண்டாதது எனவும்,
உயிர் தன்மை நீங்கியபின் இறைவனைப் போல
எண்குணங்களும் பெறும் எனவும் அது
முதல்வனோடு அத்து விதமாகும்” என்று கூறுவது

(A) ஈசுவர அவிகாரவாத சைவம் (B) சிவசங்கிராந்தவாத சைவம்

(C) சிவாத்துவித சைவம் **(D) சிவசமவாத சைவம்**

172. "திருவாசகம்" என்பதற்குப் பொருள்

**(A) மாணிக்கவாசகர் அருளிய நூல்**
(B) பக்திப் பாடல்களால் ஆனது
(C) சைவ சமய நூல்
(D) தெய்வத்தன்மை வாய்ந்த வாசகங்களாகிய நூல்

173. புராணங்களின் எண்ணிக்கை

(A) 8 **(B) 18** (C) 28 (D) 38

174. புத்தமதம் கூறும் நற்குணங்களின் எண்ணிக்கை

(A) 40 (B) 30 (C) 20 **(D) 10**

175. "பிரஸ்தான திரயம்" என்பது

(A) வேதம், உபநிடதம், புராணம்
(B) அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம்
**(C) உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை**
(D) சைவம், வைணவம், சாக்தம்

176. கோயிலை பெருக்குதல், மெழுகிடல், மலர் பறித்தல், மாலை கட்டுதல், தூப தீபம் இடுதல் போன்ற தொண்டுகளை எந்த மார்க்கத்தில் செய்வார்கள்?

(A) சன்மார்க்கம் (B) சகமார்க்கம் **(C) தாஸமார்க்கம்** (D) சற்புத்திர மார்க்கம்

177. மச்சவதாரம் எடுத்ததற்கு காரணம்

(A) ஹிரண்யாக்ஷகன் எனும் அரக்கன் பூமியை சுருட்டிக் கொண்டு கடலுக்குள் ஒளிந்தவனைக் கொல்ல எடுத்த அவதாரம்
(B) கடலில் மந்தார மலையை மத்தாக நாட்டி கடையும்போது ஒருபக்கம் சாய்ந்ததை நிமிர்த்துவதற்காக எடுத்த அவதாரம்
**(C) வேதங்களைத் திருடி கடலில் ஒளிந்திருந்த ஹயகிரீவன் என்ற அசுரனைக் கொல்வதற்கு எடுத்த அவதாரம்**
(D) இவற்றுள் எதுவுமில்லை

178. இந்துமதப் பெருமைகளில் சேராதிரப்பது எது?

(A) இந்து மதம் காலத்தால் மிகவும் முந்தியது
**(B) பிறமதக் கொள்கைகள் இதில் இருக்கின்றன**
(C) உலகில் உள்ள மதங்களுக்கு தாய் மதம்
(D) நம்பிக்கையை மட்டுமே மேற்கொண்டு அறிவினைப் புகட்டுகிறது

179. நடராஜர் உடுக்கு ஒங்காரத்தில் உலகைப் படைப்பது போல், நாராயணன் உலகைப் படைப்பதற்கு உபயோகப் படுத்துவது எது?

**(A) சங்கு** (B) காதாயுதம் (C) சுதர்சன் (D) நந்தகம்

180. மகாதபசு, பிரகாசம், சகலபுவனம் போன்றவை எந்த விழாவைக் குறிக்கின்றது?

**(A) திருவாதிரை திருவிழா**
(B) தைபூசத் திருவிழா
(C) சிவராத்திரி திருவிழா
(D) மாசிமக விழா

181. "வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே" என்று பாடியவர் யார்?

(A) அப்பர் (B) சுந்தரர் **(C) சம்பந்தர்** (D) மாணிக்கவாசகர்

சாதனையாளர்களின் சரித்திர கூடம்

182. சராயுஜ தோற்றத்தில் உருவாகும் ஜீவன்கள் எவை?

(A) விதையில் தோன்றும் ஜீவன்கள் (B) வேர்வையில் தோன்றும் ஜீவன்கள்

**(C) கருப்பையில் தோன்றும் ஜீவன்கள்** (D) முட்டையில் தோன்றும் ஜீவன்கள்

183. “மூக்தியிலும் ஆணவம் நீங்காது எனவும், கல் போல் கிடப்பதே முக்தி எனவும், ஆன்மா இறைவனோடு கூடுவதில்லை” என்று கூறுவது

**(A) பாடாணவாத சைவம்** (B) பேதவாத சைவம்

(C) சிவசமவாத சைவம் (D) சிவசங்கிராந்த வாத சைவம்

184. பஞ்சாக்ஷரத்தை அக்ஷரங்களுடன் பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. ஸ்தூலம் | - | 1. சிவாய சிவ |
| b. சூக்ஷ்மம் | - | 2. நமசிவாய |
| c. காரணம் | - | 3. சிவாயநம |
| d. மகா காரணம் | - | 4. சி |
| e. மகா மநு | - | 5. சிவ |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| **(B)** | **2** | **3** | **1** | **5** | **4** |
| (C) | 2 | 4 | 1 | 5 | 3 |
| (D) | 2 | 3 | 5 | 1 | 4 |

185. “இருவினை ஒப்பு” என்பது

(A) இறைவனும் ஆன்மாவும் இணைவது

**(B) ஆன்மா நன்மை, தீமை இரண்டையும் சமமாக பாவித்தல்**

(C) அருளும் இருளும் இணைவது

(D) கன்மமும், மாயையும் இல்லாமல் இருப்பது

186. சரியான வரிசையில் இருக்கும் பத்து அவதாரங்கள் எது?

**(A) மச்ச, கூர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராம, தசரதராம, பலராம, கிருஷ்ண, கல்கி**

(B) மச்ச, பராக, கூர்ம, நரசிங்க, பரசுராம, வாமன, தசரதராம, பரலாம, கிருஷ்ண, கல்கி

(C) மச்ச, வராக, நரசிங்க, கூர்ம, வாமன, தசரதராம, பரசுராம, பலராம, கிருஷ்ண, கல்கி

(D) இவற்றுள் எதுவுமில்லை

187. நம்மாழ்வார் இயற்றிய பாசுரங்களுக்கு என்ன பெயர்?

(A) திருவந்தாதி (B) திருமொழி **(C) திருவாய்மொழி** (D) திருப்பாவை

188. விநாயகருக்கு பொதுவாக எத்தனை கரங்கள்?

(A) இரண்டு (B) மூன்று (C) நான்கு **(D) ஐந்து**

189. “சூஷ்மலிங்கம்” என்பது

(A) கோபுரம் **(B) கொடிமரம்** (C) சுயம்பு லிங்கம் (D) விமானம்

190. கோயில்களில் எத்தனை மூலைகளில் பலி பீடங்கள் அமைக்கப்பட்டிருக்கும்?

(A) இரண்டு மூலைகள் (B) நான்கு மூலைகள் (C) ஆறு மூலைகள் **(D) எட்டு மூலைகள்**

191. “பஞ்சவித சுத்தி செய்து பாவித்துப் பூசை செய்தால் விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே” என்று பாடியவர் யார்?

(A) அப்பர் (B) சுந்தரர் **(C) தாயுமானவர்** (D) மாணிக்கவாசகர்

192. தக்ஷிணாமூர்த்தியை "மௌன குரு" என்று அழைக்கும் மேல்நாட்டவர் யார்?

(A) அன்னிபெசன்ட் **(B) பிளாவட்சுகி** (C) நைட்டிங்கேல் (D) எலன்கிலர்

193. "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியோன்" என்ற அடியை சிவபெருமான் எடுத்துக் கொடுக்க சுந்தரர் பாடியது

**(A) திருத்தொண்டத் தொகை** (B) திருவாசகம்

(C) திருத்தொண்டர் திருவந்தாதி (D) திருக்கோவை

194. பொருத்துக.

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. பிருத்துவி | - | 1. திருவண்ணாமலை | | | | | | |
| b. அப்பு | - | 2. திருவாரூர் | (A) | 4 | 2 | 3 | 5 | 1 |
| c. தேயு | - | 3. சிதம்பரம் | **(B)** | **2** | **4** | **1** | **5** | **3** |
| d. வாயு | - | 4. திருவானைக்கா | (C) | 1 | 2 | 4 | 3 | 5 |
| e. ஆகாயம் | - | 5. காளஹஸ்தி | (D) | 2 | 1 | 5 | 3 | 4 |

195. வைணவம் கூறும் ஐந்து முக்கிய பொருட்களுக்கு ------- என்று பெயர்

**(A) பஞ்சாட்சரம்** (B) பஞ்சமி (C) அர்த்த பஞ்சகம் (D) பஞ்ச பூதங்கள்

196. கோயில்கள் மனித உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன என்றால், சரியாகப் பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. பாதங்கள் | - | 1. அர்த்த மண்டபம் | **(A)** | **2** | **3** | **4** | **1** |
| b. துடை | - | 2. கோபுரம் | (B) | 3 | 4 | 1 | 2 |
| c. மார்பு | - | 3. நிருத்த மண்டபம் | (C) | 2 | 1 | 4 | 3 |
| d. கழுத்து | - | 4. மகாமண்டபம் | (D) | 4 | 2 | 1 | 3 |

197. பொருத்துக.

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. சதாசிவம் | - | 1. உமையாள் | (A) | 2 | 3 | 4 | 1 |
| b. உருத்திரன் | - | 2. சரஸ்வதி | **(B)** | **4** | **1** | **2** | **3** |
| c. பிரம்மன் | - | 3. சக்தி | (C) | 4 | 2 | 1 | 3 |
| d. சிவன் | - | 4. மனோன்மணி | (D) | 2 | 1 | 4 | 3 |

198. இந்து மதத்தினை இணைப்பதற்கு எது ஒன்று சிறந்த வழியாக இருக்கும்?

(A) இந்து மதத்தினரை உலகாயத கொள்கையினை பின்பற்றச் செய்கிறது

(B) ஆணவம், கன்மம், மாயை போன்ற தடைகள் ஆன்மாவிற்கு இல்லை என்று உணர்த்த வேண்டும்

**(C) தற்கால விஞ்ஞான ரீதியில் இந்துமத வழிபாடுகளையும், விழாக்களையும் விளக்க வேண்டும்**

(D) இவற்றுள் எதுவுமில்லை

199. ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம் போன்றவை எதில் அடங்கும்?

**(A) சோட சோபசாரங்கள்** (B) பஞ்ச சுத்தி (C) ஆலய நிர்மாணம் (D) புநராவர்த்தம்

200. எண்பத்து நான்கு லட்சம் பேதங்கள் ஏழ்பிறப்பில் உள்ளன. இதில் மனிதர்க்கு எத்தனை பேதங்கள்?

(A) பதினைந்து லட்சம் (B) பதினொரு லட்சம் (C) பத்து லட்சம் **(D) ஒன்பது லட்சம்**